**சுருக்கம்**

தொழில் – தொழில் துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2015–2016 – தமிழ்நாடு உப்பு நிறுவனம் – இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் ரூ.15 இலட்சம் செலவில் ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று வாங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்.ஐ.எப்.2) துறை

அரசாணை (டி) எண்.170

நாள் : 15.09.2015
மன்மத, ஆவணி 29,
திருவள்ளுவர் ஆண்டு –2046
படிக்கப்பட்டது :

தொழில் துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2015–2016.

------

ஆணை

2015–2016–ஆம் ஆண்டிற்கான தொழில் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

> "இராமநாதபுரம் மாவட்டம் – மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்ட வளாகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தினர் நலனைக் கருத்தில் கொண்டு ரூ.15 இலட்சம் செலவில் ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று வாங்கப்படும்."

2) மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நிதியைக் கொண்டு குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு உப்பு நிறுவனம்,
எல்எல்ஏ பில்டிங், 735, அண்ணா சாலை, சென்னை – 600 002.
நகல்
மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்து துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
தொழில் (அநமு1) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

V. S. [signature] 16.9.2015
பிரிவு அலுவலர்